# அரக்கோணம் நகராட்சி
## சாதாரண நகர மன்ற கூட்ட அறிவிப்பு

கூட்ட எண்.42 நாள்: 02.03.2026.

பொருள் : நகர மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள்: 05.03.2026 வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு சாதாரணக் கூட்டம் நடைபெறுதல் – அறிவித்தல் – சம்மந்தமாக.

**ooOoo**

அரக்கோணம் நகராட்சி நகரமன்றம் சாதாரணக் கூட்டம் 05.03.2026 வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர் நகரமன்ற கூடத்தில், நகரமன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் நகரமன்ற துணை தலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**தங்கள் அன்பார்ந்த**

நகரமன்ற தலைவர்
அரக்கோணம் நகராட்சி

இடம் : அரக்கோணம் நகராட்சி
நாள் : 02.03.2026.

# அரக்கோணம் நகராட்சி
# சாதாரணக்கூட்டம்

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 05.03.2026–ம் நாள் வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு அரக்கோணம் நகராட்சியில் அலுவலக வளாகத்தில் உள்ள டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர் நகரமன்ற கூட்டரங்கில் நகர மன்ற தலைவர் அவர்களால் நடத்தப்பட உள்ள சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

| | |
|---|---|
| **திருக்குறள்:** | **குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்<br>வடுவன்று வேந்தன் தொழில்.** |
| **விளக்கம்:** | குடிமக்களைப் பாதுகாத்துத் துணை நிற்பதும், குற்றம் செய்தவர்கள் யாராயினும் தனக்கு இழுக்கு வரும் என்று கருதாமல் தண்டிப்பதும் அரசின் கடமையாகும். |

**<u>பொருள் எண். 1</u>**

நகராட்சி ஆணையர் (ம) நகராட்சி பொறியாளர் அவர்களின் பிப்ரவரி 2026-ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்

**<u>பொருள் எண். 2</u>**

**( சாதாரண கூட்ட எண்.41 பொருள் எண் 4ல் ஒத்திவைக்கப்பட்ட மன்றப்பொருள்)**

இந்நகராட்சியில் 2025-26ம் ஆண்டு வருவாய்நிதியின் கீழ் 28.11.2025 தேதி கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கு, கீழ்காணும் விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை விவரம் ரூ. | | மதிப்பீட்டைவிட அதிக ஒப்பந்தப்புள்ளி தொகை விவரம் ரூ. | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | ரூ |
| 1 | **<u>கல்விநிதி 2025-26</u>**<br>இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவரின் தினக்கூலி அடிப்படையில் அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 10 நகராட்சி பள்ளிகள் மற்றும் 2 அரசுப் பள்ளிகளில் கழிப்பறை சுத்தம் செய்தல் மற்றும் தூய்மை பணிகளை மேற்கொள்ள 14 தற்காலிக தூய்மை பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் )Out Sourcing( மேற்கொள்ளும் பணி. | ரூ.22.40 | **ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ்** | **509** | **V.சதீஷ்குமார்** | **520** |

மேற்காணும் பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தின் முன் அனுமதி எதிர் நோக்கி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியுள்ளதற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தின் முன் அனுமதி எதிர் நோக்கி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியுள்ளதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.316/2025/எச்1)**

**<u>பொருள் எண். 3</u>**

**( சாதாரண கூட்ட எண்.41 பொருள் எண் 6ல் ஒத்திவைக்கப்பட்ட மன்றப்பொருள்)**

இந்நகராட்சியில் 2025-26ம் ஆண்டு வருவாய்நிதியின் கீழ் 21.11.2025 தேதி கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கு, கீழ்காணும் விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வஎண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை விவரம் ரூ. | | மதிப்பீட்டைவிட அதிக ஒப்பந்தப்புள்ளி தொகை விவரம் ரூ. | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | ரூ |
| 1 | **<u>2025-26 வருவாய்நிதி</u>**<br>அரக்கோணம் நகராட்சி பகுதியில் டெங்குகாய்ச்சல் மற்றும் கொசுக்களின் மூலம் பரவக் கூடிய நோய்களை பரவாமல் கட்டுப்படுத்தவும் முதிர் கொசு ஒழிப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் புகை மருந்து அடிக்கும் இயந்திரங்களை பழுது நீக்கம் செய்யும் பணி. (நிர்வாக அனுமதி எண்.769 நாள் :15.10.2025.) | 2.50 | **OM KARTHIGA SYSTEMs ENGINEERING CHENNAI** | **2,05,000** | **NADI ENTERPRISES CHENNAI** | **2,25,000** |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.550/2025/எச்1)**

**<u>பொருள் எண்.4</u>**

**( சாதாரண கூட்ட எண்.41 பொருள் எண் 7ல் ஒத்திவைக்கப்பட்ட மன்றப்பொருள்)**

இந்நகராட்சியில் 2025-26ம் ஆண்டு வருவாய்நிதியின் கீழ் 07.11.2025 தேதி கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதற்கு, கீழ்காணும் விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **கிருமி நாசனியின் பெயர்** | **2025-2026 ஆம் ஆண்டிற்கு தேவைப்படும் அளவு** | **R.Dilli Babu Arakkonam (Including GST)** | **M.Gokula Krishnan Arakkonam (Including GST)** |
|---|---|---|---|---|
| 1 | நீர்த்த சுண்ணாம்பு தூள் (1 கிலோ) | 7800 கிலோ | ரூ.9.85/- | ரூ.10.00/- |
| 2 | பிளிச்சிங் பவுடர் (1 கிலோ) | 2600 கிலோ | ரூ.49.00/- | ரூ.50.00/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | பினாயில் (1 லிட்டர்) | 500 லிட்டர் | ரூ.87.32/– | ரூ.88.50/– |

மேற்காணும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கியுள்ளதற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தின் முன் அனுமதி எதிர் நோக்கி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியுள்ளதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.558/2025/எச்1)**

**<u>பொருள் எண். 5</u>**

**( சாதாரண கூட்ட எண்.41 பொருள் எண் 13ல் ஒத்திவைக்கப்பட்ட மன்றப்பொருள்)**

அரக்கோணம் நகராட்சியில் 10 மேல்நிலை நீர் தேக்க தொட்டியில் இருந்து பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. மேலும் இந்நகர மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க குளோரின் சீரான அளவில் கலக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் விடுபட்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் புதிய குளோரினேசன் டேங்க் அமைக்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் காணொளி காட்சி ஆய்வு கூட்டத்தில் அறிவுரை வழங்கப்பட்டது எனவே புதிய பேருந்து நிலையம், கல்லாறு தலைமை நீரேற்று நிலையம் மற்றும் நகராட்சி அலுவலகம் ஆகிய மூன்று இடங்களில் குளோரினேஷன் டேங்க் (Automatic Method) முறையில் அமைப்பதற்கு தோராய மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 15.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிக்கான தொகையினை 2025–26 ஆம் ஆண்டு வருவாய் / குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 528/2025/இ1

**<u>பொருள் எண். 6</u>**

**( சாதாரண கூட்ட எண்.41 பொருள் எண் 17ல் ஒத்திவைக்கப்பட்ட மன்றப்பொருளின் திருத்திய மன்றப்பொருள்)**

இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் நகராட்சி ,சர்வே வார்டு –C, பிளாக் எண்–1, நகரளவு எண். – 20 / 4 (பழைய சர்வே எண். – 87,88/1 மற்றும் 88/2) – ல் 4.11 ஏக்கர் (அ) 16640 ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தில் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்புமனைப்பிரிவிற்கு இராணிப்பேட்டை மாவட்ட நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர் அவர்களின் திட்ட அனுமதி உத்தரவு ந.க.எண்.RPT/DWQ9CX19/34250 /2024/TCP, நாள்.10.10.2024ல் குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/மா.ந.ஊ.அ (ரா.மா) எண்.102/2024என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த குடியிருப்பு மனைப்பிரிவில் 80 குடியிருப்பு மனைகள் ஒதுக்கப்பட்டுள்ளது. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி அனுமதி அளித்தல் சம்மந்தமாக பின்பற்ற வேண்டிய திருத்திய நடைமுறைகள் குறித்து நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12843/2022/டிபி2, நாள்.20.10.2022 மற்றும் 01.08.2023–ல் வழிமுறைகள் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் குறிப்பிட்டுள்ளவாறு உள்ளாட்சி உபயோகத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடம் – 69.95 ச.மீ, சாலை ஒதுக்கீடுஇடம்– 4653.90 ச.மீ , பூங்கா –I – 839.35 ச.மீ , பூங்கா –II–408.76 ச.மீ ,புல்வெளி –I –128.93 ச.மீ ,

புல்வெளி – II –211.35 ச.மீ மற்றும்TANGEDCO உபயோகத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடம் 70.20 ச.மீ ஆக மொத்தம் 6382.44 சதுர மீட்டர் பரப்பளவிலான இடம் தான பத்திர ஆவண எண்.8498/2024, நாள்.03/01/2025–ல் , நகர் ஊரமைப்புத் துறையால் அரக்கோணம் நகராட்சிக்கென தானம் பெறப்பட்டுள்ளது. மேற்படி அரக்கோணம் நகராட்சிக்கு தானமாக பெறப்பட்டுள்ளதற்கு நகரமன்ற பின்னேற்பு வழங்கவும்,

மேற்படி சுற்றிக்கையில் தெரிவித்துள்ளவாறு, மனைப்பிரிவின் சாலைகள், மழைநீர்வடிகால், மற்றும் குடிநீர் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளதாக CHANDRASEKHARENDRA SARASWATHI VISWA MAHAVIDYALAYA (SCSVMV) காஞ்சிபுரம், கல்லூரியால் ஆய்வு மேற்கொண்டு மூன்றாம் தரப்பினர் சான்று அளிக்கப்பட்டுள்ளதாகவும், மேற்கண்ட மனைப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள சாலைகள், மழைநீர் கால்வாய், சிறுபாலங்கள் குடிநீர் குழாய்கள் ஆகிய பணிகள் தரமான முறையில் அமைக்கப்பட்டுள்ளதாக நகராட்சி பொறியாளர் அவர்களால் 9.1.2026ம் தேதியில் சான்று வழங்கப்பட்டுள்ளது.

மனைப்பிரிவில் தெரு விளக்கு மின் கம்பங்கள் அமைக்க மனுதாரரால் TANGEDCO விற்கு ரூ.3,21,810/– தொகை செலுத்தப்பட்டுள்ளது, பூங்கா பகுதியில் உரிய அபிவிருத்திப்பணிகள் மனுதாரரால் ஏற்படுத்தப்பட்டுள்ளதாலும், மூன்றாம் நபர் தரப்பரிசோதனை பெறப்பட்டதன் அடிப்படையிலும், நடப்பில் உள்ள விதிமுறைகளின்படி நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் செலுத்தப்பட்டதன் அடிப்படையிலும் மனைப்பிரிவிற்கு நகராட்சி ஒப்புதல் அளிக்க நகரமன்ற அனுமதி வழங்கவும் மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.
**(ந.கஎண்.540/2025/எப்1)**

**<u>பொருள் எண். 7</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை –28 அவர்களின் கடித ந.க.எண்.DMA/272/2026/எம்எ1 நாள்.17.02.2026ல் கடிதத்தில் அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு வார்டு சபா கூட்டத்தில் பெறப்பட்டுள்ள கோரிக்கைகளின் அடிப்படையில் கீழ்குறிப்பிட்டுள்ள 8 எண்ணிக்கையிலான பணிகளை மதிப்பீடு ரூ.25.30 இலட்சத்தில் பொது நிதியில் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| S. No | Name of works | Estimate Cost (Rs. In lakhs) |
|---|---|---|
| 1 | Providing Culvert at V.P. Koil Lane Street (024030R461) at Ward No 30 in Arakkonam Municipality. | 1.62 |
| 2 | Providing Culvert at Sathiyavani Muthu Nagar 1st Street (024028R519), 2ndStreet (024028R521), 3rd Street (024028R512), 4th Street (024028R527) at Ward No 28 in Arakkonam Municipality. | 4.60 |
| 3 | Providing Culvert at Bajanai Koil Street (024011R261), Old Bazaar Street (024011R259) Ward No 11 in Arakkonam Municipality | 2.58 |
| 4 | Providing Culvert at Bazaar Street North (024012R265) Ward No 12 in Arakkonam Municipality. | 1.23 |

| | | |
|---|---|---|
| **5** | Providing Culvert at Murugappan Street (024016R300), Sundaram Street (024016R303), Sathyamoorthi Street (024016R302) Ward No 16 in Arakkonam Municipality | 5.57 |
| 6 | Providing Strom Water Drain at Rajabhatar Cross Street 024011R270,Ward 11 in Arakkonam Municipality. | 3.00 |
| 7 | Providing Strom Water Drain at Sundaram Street 024016R303,Ward 16 in Arakkonam Municipality. | 4.46 |
| 8 | Providing Strom Water Drain at Suburayan Street 024016R298,Ward 16 in Arakkonam Municipality. | 2.24 |

**அலுவலக குறிப்பு :– மன்றம் பதிவு செய்யலாம்**

( ந.க.எண்.197/2025/இ1)

**<u>பொருள் எண். 8</u>**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் நிதி 2025–26ம் ஆண்டின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் கீழ்காணும் பணிகளுக்கான பணி உத்திரவு 31.03.2025 தேதியுடன் முடிவடைகிறது. எதிர் வரும் சட்டமன்ற தேர்தல் கருத்தில் கொண்டும், பொது மக்களுக்கு சீரான குடிநீர் வழங்கவும், குடிநீர், பணியின் அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும், மேற்படி பணிகளுக்கான மறுஒப்பந்தப்புள்ளி கோரும் வரை 01.04.2026 தேதி முதல் 30.06.2026 வரை மூன்று மாதங்களுக்கு அல்லது ஒப்பந்தப்புள்ளி கோரி புதிய பணி உத்திரவு வழங்கப்படும் வரை கீழ்காணும் பணிகளை ஏற்கனவே செய்து வரும் இந்நகராட்சி ஒப்பந்ததாரர்களை கொண்டு அதே ஒப்பந்தப்புள்ளி விலைக்கே இப்பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வஎண்** | **பணியின் பெயர்** | **ஒப்பந்ததாரர் பெயர்** |
|---|---|---|
| 1 | **<u>பொதுநிதி/குடிநீர்</u>**<br>2025–26ம் ஆண்டிற்கான தக்கோலம் மற்றும் கல்லாறு தலைமை நீரேற்றும் நிலையத்தில் வெளிக்கொணர்வு முகமையின் மூலம் பணிகளை மேற்கொள்ள 9 குடிநீர் பராமரிப்பு பணியாளர்கள் மற்றும் 2 மின் பணியாளர்கள் பெற்று குடிநீர் விநியோக பணிகள் மேற்கொள்ளுதல். | **R.சண்முகம்** |
| 2 | **<u>பொதுநிதி/குடிநீர்</u>**<br>2025–26ம் ஆண்டிற்கான அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோக பணிகளுக்கு தேவையான மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் பணியாற்ற 6 வால்வு ஆப்ரேட்டர்கள், 4 குடிநீர் பராமரிப்பு பணியாளர்கள் மற்றும் 2 மின் பணியாளர்கள் ஆகியோர் வெளிக்கொணர்வு முகமையின் மூலம் பணி ஆட்களை பெற்று குடிநீர் விநியோக பணிகள் மேற்கொள்ளுதல். | **V.சதீஷ்குமார்** |

| | | |
|---|---|---|
| 3 | **<u>பொதுநிதி/குடிநீர்</u>**<br>அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளில் உள்ள பொதுமக்களுக்கு வேலூர் கூட்டு குடிநீர் திட்டம், கல்லாறு மற்றும் தக்கோலம் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து அரக்கோணம் நகருக்கு குடிநீர் பெறப்பட்டு மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளின் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்திட குடிநீரில் சோடியம் ஹைபோ குளோரைடு கலந்து பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்திட 2025- 26 ஆம் ஆண்டிற்கு தேவையான சோடியம் ஹைபோ குளோரைடு திரவத்தினை விநியோகம் செய்யும் பணி. | **ஸ்ரீ சபரி இன்ஜினியரிங் சென்னை** |
| 4 | **<u>பொதுநிதி/குடிநீர்</u>**<br>அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான தக்கோலம் தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள 14 எண்ணிக்கை ஆழ்துளை கிணறு மற்றும் கல்லாறு நீரேற்று நிலையத்தில் உள்ள 11 எண்ணிக்கை ஆழ்துளை கிணறுகளில் இயக்கப்படும் மின்மோட்டார்களை 2025-26 ஆம் ஆண்டில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுது பார்த்து இயக்கும் பணி. | **R.சண்முகம்** |
| 5 | **<u>பொதுநிதி/குடிநீர்</u>**<br>அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் உள்ள பகுதிகளில் பிரதான மற்றும் பகிர்மான குழாய்களில் அவ்வப்பொழுது ஏற்படும் உடைப்புகளை (Leakage) சரிசெய்து பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி சீரான குடிநீர் விநியோகம் செய்ய 2025-26 ஆம் ஆண்டிற்கு பிரதான மற்றும் பகிர்மான குழாய்களின் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | **இராஜகோபால்** |
| 6 | **<u>பொதுநிதி/குடிநீர்</u>**<br>இந்நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளில் உள்ள கைப்பம்பு, சிறுமின் விசைப்பம்பு, மற்றும் கழிவறை மின்மாட்டார்களில் அவ்வப்போது ஏற்படும் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | **C.பத்மநாபன்** |

அலுவலக குறிப்பு : குடிநீர் பணியின் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.217/2025/இ1)

**<u>பொருள் எண். 9</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்க்ண்டுள்ள வார்டுகளில் உள்ள தொழில் வர்த்தகம், வாழ்க்கை தொழில் மற்றும் வேலை மீதான வரி கேட்புகள் வசூலிக்க இயலாமல் பல ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது. இக்கேட்புகளை வருவாய் உதவியாளர்கள், வருவாய் ஆய்வர்கள் மற்றும் துப்புரவு ஆய்வர்களை கொண்டு வசூலிக்க நடவடிக்கை மேற்கொண்ட போது, பல்வேறு தொழில் வரி கேட்புகள் இரட்டை வரி விதிப்புகள், கடை காலி செய்த வரி விதிப்புகள், ஆகியவைகளை கண்டறிய இயலாத வரி விதிப்புகள் ஆகவும், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், இட மாறுதலில் சென்ற அரசு பணியாளர்கள், மற்றும் பிற வாழ்க்கை தொழில் மற்றும் வேலை மீதான வரிகள் செலுத்த வேண்டிய தொழில் வரி போன்றவையாக உள்ளன. இக்கேட்புகள் இனி வசூல் செய்ய இயலாதவை என வருவாய் உதவியாளர்கள், வருவாய் ஆய்வர்கள் மற்றும் துப்புரவு ஆய்வர்களால் கோரியவாறு குறிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

**<u>வார்டு வாரியான தொழில் வரி நீக்கம் செய்ய வேண்டிய விவரம்</u>**

| வ. எண் | வார்டு எண் | வரி விதிப்புகளின் எண்ணிக்கை | தொகை ரூ/- |
|---|---|---|---|
| 1 | 02 | 8 | 2,31,961/- |
| 2 | 3 | 25 | 6,52,244/- |

| | | | |
|---|---|---|---|
| 3 | 4 | 16 | 3,56,494/- |
| 4 | 6 | 2 | 44,538/- |
| 5 | 8 | 13 | 3,68,687/- |
| 6 | 9 | 4 | 10,9060/- |
| 7 | 11 | 13 | 3,30,332/- |
| 8 | 12 | 171 | 4,71,4234/- |
| 9 | 13 | 40 | 100,2,359/- |
| 10 | 16 | 7 | 1,60,374/- |
| 11 | 18 | 261 | 6,62,9131/- |
| 12 | 21 | 3 | 71,499/- |
| 13 | 22 | 71 | 1,60,1775/- |
| 14 | 23 | 14 | 3,40,664/- |
| 15 | 26 | 19 | 5,43056/- |
| 16 | 27 | 2 | 44,538/- |
| 17 | 33 | 10 | 63,768/- |
| 18 | 34 | 10 | 30,2855/- |
| 19 | 35 | 86 | 2,24,6471/- |
| | | மொத்தம் ரூ. | 1,82,34,533/- |

எனவே, மேற்கண்டுள்ள நிலுவை மற்றும் நடப்பு கேட்புகள் தொகை ரூ. 1,82,34,533/-ஐ நீக்கம் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை, அவர்களின் ஒப்புதல் பெற மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** வசூலிக்க இயலாத நிலுவை மற்றும் நடப்பு தொழில் வரி தொகை ரூ.1,82,34,533/-ஐ நடப்பு மற்றும் நிலுவை கேட்பிலிருந்து நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

நகரமன்ற தலைவர்
அரக்கோணம் நகராட்சி

**<u>பொருள் எண். 10</u>**

**<u>25வது வார்டு நகர மன்ற உறுப்பினர் திரு.துரை சீனிவாசன் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம் நன்றி தெரிவிக்கும் தீர்மானம்.</u>**

மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதியார் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் கொண்டு வரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

1.31 கோடி மகளிர்க்கு கோடைகால சிறப்பு தொகை ரூ.2000 வழங்கப்பட்டதற்கும் பல்வேறு சமூக திட்டங்களின் பயன்பெற்று வரும் 37.79 லட்சம் பேருக்கு மார்ச் மாதம் ஓய்வூதியத்துடன் சேர்த்து கோடைக்கால சிறப்பு தொகை ரூ.2000 வழங்கியதற்கும் வீட்டு மனை பட்டாக்கள் கடந்த 5ஆண்டுகளில் 23.56 லட்சம் நபர்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்கியதற்கும், கலைஞர் கனவு என்னும் திட்டத்திற்கு 2 லட்சம் பேருக்கு வீடு கட்டுவதற்கும், இதே போல 500 மேற்பட்ட தேர்தல் வாக்குறுதி அளித்தபடி, அனைத்து வாக்குறுதிகளும் நிறைவேற்றி தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் இந்த திட்டங்கள் இராணிப்பேட்டை மாவட்டம் முழுவதும் மக்களுக்கு சரியான முறையில் சென்றடைய ஒத்துழைப்பு அளித்த மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அண்ணன் திரு.ஆர்.காந்தி அவர்களுக்கும் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**<u>பொருள் எண். 11</u>**

**<u>29வது வார்டு நகர மன்ற உறுப்பினர் திருமதி.P.நந்தாதேவி அவர்கள் கொண்டுவரும் தீர்மானம் நன்றி தெரிவிக்கும் தீர்மானம்.</u>**

மகளிருக்கு உரிமைத் தொகையுடன், கோடைகால சிறப்பு உதவி தொகையாக ரூ.2000-த்துடன் மொத்தமாக ரூ,5000/- வழங்கியதற்கும், முதியோர், விதவைகள், மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.2000 சிறப்பு நிதி அளித்ததற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றி தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**<u>பொருள் எண். 12</u>**

**<u>28வது வார்டு நகர மன்ற உறுப்பினர் திருமதி.S.ராஜலட்சுமி அவர்கள் கொண்டுவரும் தீர்மானம் நன்றி தெரிவிக்கும் தீர்மானம்.</u>**

தமிழ்நாடு முழுவதும் விதவை முதியவர்களுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும், ரூ.38,000/- சிறப்பு நிதி வழங்கியதற்கும், மகளிர்க்கு சிறப்பு கோடைக்கால நிதி ரூ.2000 வழங்கியதற்கும் எமது அரக்கோணம் நகராட்சி சார்பாகவும், அனைத்து நகரமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும், நகரமன்ற தலைவர், துணைத் தலைவர், சார்பாகவும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் தெரிவித்துக் கொள்கிறோம்,